**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**
DEPOSITION OF WITNESS
(Chapter XXV of BNSS)

| | |
|---|---|
| Case No. | : STC No.1535/2025 |
| Deposition of witness for Prosecution | : PW-1 |
| Name | : பிரபாகர், வயது 46 |
| Father Name/Husband Name | : செங்கையா |
| Village | : கோவில்பட்டி |
| Taluk | : கோவில்பட்டி |
| Calling | : தனியார் வேலை |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 01st day of June 2026.

**(Accused absent. U/s 355 BNSS PFA).**

**முதல் விசாரணை**

1.நான் தற்போது திருப்பூரில் வசித்து பனியன் கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் இல்லாத எதிரியை எனக்குத் தெரியும். அவர் எனது அண்ணன். கடந்த 2010 ஆம் ஆண்டில் கோவில்பட்டியில் உள்ள பழத்தோட்ட நகர் 507 என்ற கதவு எண் கொண்ட வீட்டினை சுமார் 3.5 சென்ட் அளவுள்ளது, எனது அண்ணன் எதிரி சுதாகர் என்பவருக்கு எனது அம்மா பட்டம்மாள் எனக்கும், எனது தம்பிக்கும் தெரியாமல் தான செட்டில்மென்டாக எழுதிக் கொடுத்தார். ஒரு வருடம் கழித்து எனக்கு தெரிந்த பிறகு எங்க அம்மாவுக்குச் சொந்தமாக காலி மனை இடத்தை எனக்கும், என் தம்பிக்கும் பாகமாக எடுத்துக் கொள்ளுங்கள் என்று கூறியபோது எனது தம்பி எல்லாவற்றையும் எனக்கு அந்த காலிமனை இடத்தை கொடுத்துவிட்டார்.

2. பின்னர் எனது அண்ணன் சுதாகர் அம்மாவை கடைசி வரை நான் பார்த்துக் கொள்கிறேன் என்றும், நீயும் தம்பியும் என்னுடைய வீட்டிற்கு வரக்கூடாது என்று சார்பதிவாளர் அலுவலகத்தில் விடுதலை பத்திரம் ஒன்றை என்னிடம் இருந்து எழுதி வாங்கிக் கொண்டார். அப்போது என்னுடைய பெண் குழந்தைக்கு உடல்நிலை சரியில்லாததால் அதைப் பார்ப்பதற்காக எனது அம்மா எனது அண்ணன் சுதாகரிடம் தெரிவிக்காமல் என் குழந்தையை மருத்துவமனையில் வந்து

பார்த்ததால் எனது அம்மாவை திரும்ப வீட்டிற்குள் விடமாட்டேன் என்று எனது அண்ணன் சுதாகர் வாக்குவாதம் செய்தார். பின்னர் அதே வீட்டில் நான்கு வருட காலமாக எனது அம்மா சுதாகர் வீட்டில் இருந்தார். பின்னர் எனது அம்மா இருந்த வீட்டில் எனது அண்ணன் சுதாகர் அதே வீட்டில் மாடி ஒன்றைக் கட்டி அந்த இடத்தில் எனது அம்மாவை தங்க வைத்தார். எனது அம்மாவிற்கு சுமார் 65 வயது என்பதால் மாடியில் என்னால் வசிக்க முடியாது என்று எனது அண்ணன் சுதாகரிடம் கூறிய போது அவர் அதற்கு மறுப்பு தெரிவித்து மாடியில் தான் தங்க வேண்டும் என்று சுமார் இரண்டு வருட காலம் மாடி வீட்டில் தங்கினார்.

3. அதனால் என் அண்ணன் சுதாகருக்கும், எனது அம்மாவுக்கும் வீட்டில் தங்குவதற்கு ஒத்துப் போகவில்லை என்பதால் 2024 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஒரு நாள் எனது அம்மாவை இரவு 10.00 மணியளவில் எனது அண்ணன் சுதாகர் அடிக்க முற்பட்டார். பின்னர் எனது அம்மா எனக்கு தொலைபேசி மூலம் சுதாகர் என்னை அடிக்க வருகிறார் என்று கூறியபோது, நான் 100 க்கு போன் செய்து காவல் துறையினரால் எனது அம்மாவை திருப்பூருக்கு அழைத்துச் சென்றேன். பின்னர் எனது அம்மா கட்டிய வீட்டை சுதாகர் தங்கவிடாமல் தடுப்பதற்கு என் அம்மாவிடம் இருந்து தானம் செட்டில்மென்ட்டை சுதாகர் எழுதி வாங்கிக் கொண்டதால் கோவில்பட்டி வருவாய் கோட்டாட்சியருக்கு நானும், எனது அம்மாவும் மனு எழுதிக் கொடுத்தோம். பின்னர் விசாரித்த பிறகு வருவாய் கோட்டாட்சியர் எனது அம்மா பென்சன் வாங்குவதாலும், பொருளாதார ரீதியாக பிரச்சனை இல்லை என்பதாலும், தங்குவதற்கு இடம் இல்லை என்பதால் என் வீட்டில் கொஞ்ச நாட்கள், எனது அண்ணன் சுதாகர் வீட்டில் கொஞ்ச நாட்கள் தங்குவதற்கு உத்தரவு பிறப்பித்தார். அதற்கு என் அண்ணன் சுதாகர் என் அம்மாவை வீட்டில் தங்க விடமாட்டேன் என்று மறுப்பு தெரிவித்ததால் வருவாய் கோட்டாட்சியர் மாவட்ட ஆட்சியரிடம் செல்லுங்கள் என்று எங்களுக்கு அறிவுரை கூறினார்.

4. பின்னர் நாங்கள் மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுத்த போது மறுபடியும் கோவில்பட்டி வருவாய் கோட்டாட்சியருக்கு விசாரணை செய்து உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று கூறியதால் வருவாய் கோட்டாட்சியர் அதே உத்தரவை மீண்டும்

பிறப்பித்தார். பின்னர் எனது அண்ணன் என் அம்மாவை வீட்டில் சேர்க்க மாட்டேன் என்று மறுப்பு தெரிவித்தால் வருவாய் கோட்டாட்சியர் உத்தரவை DSP அவர்களுக்கு தக்க நடிவடிக்கை எடுக்குமாறு உத்தரவை பிறப்பித்தார். DSP அவர்கள் விசாரணை செய்த போது எனது அண்ணன் என் அம்மாவை வீட்டில் தங்க வைக்க வேண்டும் இல்லையென்றால் உங்கள் மீது வழக்கு பதியப்படும் என்று கூறினார். அதற்கு எனது அண்ணன் சுதாகர் என் மீது வழக்கு பதிவு செய்தாலும் பரவாயில்லை, கோட்டாட்சியர் உத்தரவையும், ஆட்சியர் உத்தரவை மதிக்காமல் எனது அண்ணன், எனது அம்மாவை வீட்டில் சேர்க்க மாட்டேன் என்று கூறியதால் எனது அம்மா மிகுந்த மன உளைச்சல் ஏற்பட்டு, ஆறு மாத காலம் சிகிச்சை பெற்று சிகிச்சை பலனளிக்காமல் 07.10.2025 ஆம் தேதி எனது அம்மா திருப்பூரில் இறந்து விட்டார்.

5. எனது அண்ணன் சுதாகர் எனது அம்மாவை வீட்டில் தங்க வைத்திருந்தால் எனது அம்மா சிறிது காலமாவது உயிரோடு இருந்திருப்பார். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவை நான் தான் எழுதினேன். அதில் எனது தாயார் பட்டம்மாள் கையெழுத்து செய்தார். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை:</u>

6. நான் 10 ஆம் வகுப்பு பாதி வரை படித்துள்ளேன். நான் பனியன் கம்பெனியில் கூலியாக வேலை செய்கிறேன். நான் திருப்பூரில் தற்போது சொந்த வீட்டில் குடியிருந்து வருகிறேன். எதிரி, நான், திவாகர் ஆகியோர் உடன்பிறந்த சகோதரர்கள் என்றால் சரிதான். எதிரி சுமாராக 1999 ஆம் ஆண்டிலிருந்தே ராணுவத்தில் வேலை பார்த்து வருகிறார். எதிரி எந்த வருடம் ஓய்வு பெற்றார் என்று எனக்குத் தெரியாது. இலுப்பையூரணி கிராமத்தில் எனது தாயார் பெயரில் உள்ள 3 சென்ட் இடம் எப்போது வாங்கப்பட்டது என்றால் அது எனக்க ஞாபகமில்லை, ஆனால் அதில் என்னுடைய உழைப்பும் உள்ளது, அப்பா சேமிப்பு, அண்ணன் உழைப்பும் உள்ளது. மேற்படி இடத்தை வாங்கும் போது எதிரி இராணுவத்தில் பணியில் இருந்தார். அந்த இடம் எவ்வளவு தொகைக்கு கிரையம் பெறப்பட்டது என்றால் எனக்குத் தெரியாது, எனது தந்தையிடம் தான் நான் பணத்தைக் கொடுத்தேன். அந்த இடத்தை கிரையம் வாங்கினதற்கு நான் எந்த தொகையும் கொடுக்கவில்லை என்பதால்தான் அது பற்றி எனக்குத் தெரியாது என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

7. எதிரி இராணுவத்தில் பணிபுரிந்ததால் மேற்படி இடத்தை கிரையம் செய்ய அவரால் வர இயலவில்லை என்பதால் எதிரி அவரது தாயார் மூலம் பணத்தைக் கொடுத்து மேற்படி இடத்தை வாங்கினார் என்றால் சரியல்ல, அந்தக் காலக்கட்டத்தில் கிரையம் செய்வதற்கு வாங்குபவர் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு நேரில் வர வேண்டிய கட்டாயம் கிடையாது. எந்த வருடம் வரை மேற்படி நடைமுறை சார்பதிவாளர் அலுவலகத்தில் இருந்தது என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. எனது தாயார் பெயரிலுள்ள கிரையப் பத்திரத்தை நீங்கள் பார்த்துள்ளீர்களா என்றால் நான் பார்க்கவில்லை. அந்தப் பத்திரத்தை பார்த்தால்தான் அதில் எனது தாயாரின் கையொப்பம் உள்ளதா என்று தெரிய வரும் என்றால் சரியல்ல. அந்த இடத்தை வாங்குவதற்கும், வீடு கட்டுவதற்கும் எதிரிதான் எனது தாயாருக்கு பணம் கொடுத்ததால் தான் அந்த இடத்தை, அந்த வீட்டை எனது தாயார் எதிரிக்க தான செட்டில்மெண்டாக எழுதிக் கொடுத்தார் என்றால் சரியல்ல, அம்மா பெயரில்தான் அந்த வீட்டு லோன் கட்டப்பட்டது. அதற்கு ஏதாவது ஆவணம் உள்ளதா என்றால் என்னிடம் இல்லை, எனது அம்மா பெட்டியில் பார்க்க வேண்டும், Bank of India வில் ஆவணம் உள்ளது.

8. மேற்படி வீட்டை எனது தாயார் எதிரிக்கு எழுதிக் கொடுத்த பிறகு 2014 ஆம் ஆண்டில் எதிரி மேற்படி வீட்டில் மாடி கட்டி உள்ளார் என்றால் சரிதான். அதில் தான் எனது தாயார் குடியிருந்து வந்தார் என்றால் கீழே இருந்த எனது தாயாரை எதிரி மேலே குடியமர்த்தினார். எதிரிதான் எனது தாயாரை நல்ல முறையில் பராமரித்து வந்தார் என்றால் சரியல்ல. அந்த வீட்டை எதிரிக்கு தான செட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்த பிறகு எதிரி, எனக்கும், எனது மற்றொரு சகோதரருக்கும் தலா ரூ. 2,00,000/- கொடுத்து விடுதலைப் பத்திரம் எழுதி வாங்கினார் என்றால் சரிதான், எனது அம்மாவை வைத்து, எதிரி நன்றாகப் பார்க்க வேண்டும் என்பதால் நான் எழுதிக் கொடுத்தேன், எதிரி எனது தாயாரை துன்புறுத்தியதால் நான் மீண்டும் உள்ளே வந்தேன்.

9.எதிரி எனது தாயாரை நல்ல முறையில் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் எனக்கு இருந்திருந்தால் நான் எதிரியிடம் பணம் வாங்காமல் விடுதலை ஆவணத்தை எழுதிக் கொடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. எதிரி எனது தாயாரை துன்புறுத்தவில்லை என்றால் சரியல்ல. நான் எதிரியின் வீட்டை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் எனது தாயார் மூலம் எதிரிக்கு பல்வேறு வகையில் இடையூறுகள் செய்தேன் என்றால் சரியல்ல. நான் எனது தாயாரை தூண்டிவிட்டு எதிரியை கொடுமை செய்ததால் , எதிரி தற்கொலை செய்ய முயன்றார் என்றால் சரியல்ல. எனது தூண்டுதலின் பேரில் எனது தாயார் எதிரி மீது கோவில்பட்டி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் OS No. 209/2016 என்ற வழக்கை தாக்கல் செய்தார் என்றால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது, ஆனால் நான் தூண்டிவிடவில்லை. அந்த வழக்கு 2019 ஆம் ஆண்டு மக்கள் நீதிமன்றம் மூலம் சமரசமாக முடிக்கப்பட்டது என்றால் எதிரி எனது தாயாரை சரியாகப் பார்ப்பதாக நீதிபதியிடம் சொன்னதால் சமரசம் ஆக முடிக்கப்பட்டது. அதன் பிறகு எதிரி ரூ.6,00,000/- பணம் மற்றும் 5 பவுன் நகையை வாங்கி வைத்துக் கொண்டு தர மறுத்து வருவதாக எனது தாயார் புகார்

கொடுத்துள்ளார் என்றால் மாடி வீடு கட்டுவதற்கு எனது தாயார் அவரது செயினை பணத் தேவைக்காக, எதிரிக்கு கொடுத்ததன் அடிப்படையில் புகார் கொடுக்கப்பட்டது. எதிரி எனது தாயாரை கொடுமை செய்வதாகச் சொல்வது, எனது தாயார் எதிரிக்கு பணம், நகை கொடுத்ததாக சொல்வது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான், ஆனால் போலிசாருக்குத் தெரியும்.

10. எனது தாயார் கொடுத்த புகார் பொய்யானது என்பதால், எந்த மேல் விசாரணை இல்லாமல் போலிசாரால் முடிக்கப்பட்டது என்றால் சரியல்ல. எதிரியிடம் பணம் பறிப்பதற்காக எனது தாயார் மூலம் பொய் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல, நான் 30 ஆண்டுகளாக புகார் கொடுக்காமல் தற்போதுதான் புகார் கொடுக்கப்பட்டதால் இந்த புகார் உண்மையானது. எதிரி துப்பாக்கி காண்பித்து மிரட்டியதாக நானும், எனது தாயாரும் தனித்தனியாக புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல, எதிரி குண்டை எனது தாயார் மீது எறிந்ததால், அதை அவர் எடுத்துக் கொண்டு திருப்பூருக்கு வந்தார், இரண்டு மாதங்கள் கழித்து நாங்கள் காவல் கண்காணிப்பாளிரிம் ஒப்படைத்தோம், அவர் DSP மூலமாக சோதனை செய்தார். நான் புகார் கொடுத்த சமயத்தில் எதிரி ராணுவத்தில் பணியில் இருந்தாரா என்றால் பணி ஓய்வு பெற்று விட்டார்.

11.பொதுவாக இராணுவத்தில் பணி ஓய்வு பெறும் போது ஆயுதம் கொடுக்கப்படாது என்றால் சரியல்ல. ரூ.18,000/- ஓய்வூதியம் பெறும் எனது தாயார் RDO விடம் மனு கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல, எனது தாயாருக்கு பொருளாதார பிரச்சனை கிடையாது, மேற்படி வீட்டில் வசிக்கவே புகார் கொடுத்தார். RDO பிறப்பித்த உத்தரவு நகல் எனக்கு சார்பு செய்யப்பட்டது. மேற்படி RDO விசாரணையில் எனது தாயார் பணமில்லாமல் தவிப்பதாக நான் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல, ஐந்து பவுன் இல்லை என்பதைதான் நாங்கள் கேட்டோம். இந்த வழக்கு புகார் உட்பட அனைத்து புகார்களும், என்னால் எதிரிக்கு எதிராக எழுதப்பட்டது என்றால் எழுதியது நான், கையொப்பம் செய்தது எனது தாயார்.

12. RDO உத்தரவுப்படி எதிரிக்கும் எனது தாயாருக்கும், கருத்து வேறுபாடு இருந்ததால் எனது வீட்டிற்கு வந்த என் தாயாரை நான்தான் எனது வீட்டில் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்குப் பிறகு நான் எனது தாயாரை எனது வீட்டிற்கு அழைத்துச் சென்று விட்டேன் என்றால் சரிதான், எனது தாயாருக்கு பிரச்சனை என்பதால் ஒரு மகனாக நான் வந்தேன், அப்போது எனது தாயார் மன உளைச்சலில் ஆரோக்கியமாக இல்லை. அப்போது ஆரோக்கியமாக இருந்த எனது தாயாரை நான் நல்ல முறையில் பராமரிக்கவில்லை என்பதால் எனது தாயார் விரைவாக இறந்துவிட்டார் என்றால் சரியல்ல, RDO விசாரணையில் எனது தாயார் மன உளைச்சலில் இருந்ததாக உள்ளது. நான் சொன்னதைதான் RDO விசாரணையில் எனது தாயார் சொன்னார் என்றால் சரியல்ல. இந்த வழக்கு புகார் மனுவில் எதிரியைப் பழிவாங்க நான் எனது தாயாரிடம் படித்து காண்பிக்காமல் கையொப்பம் பெற்று காவல் நிலையத்தில் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும், எனது தாயாருக்கும் சுமூகமாக உறவு இருந்ததாக எனது தாயார் தான் சொல்ல முடியும்

என்றால் சரியல்ல, எதிரியின் நிர்பந்தத்தால் எனது தாயாருக்கு நெருடல் இருந்தது கொண்டே இருந்தது. நான் அவ்வாறு பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நல்வாழ்வு சட்டப்படி தண்டிக்கத்தக்க எந்த குற்றமும் செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும், நீதிமன்றத்தில் தெரிந்தே பொய்யாக சாட்சியம் அளித்துள்ளீர்கள் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court
in the presence of accused and
read over to the witness and
acknowledged by him/her to be
Correct.

Sd/ Tr. K. Anand, B.A, M.L.,
Judicial Magistrate No.1,
Kovilpatti.